செ.வெ. எண்: 1057 1/12/2010

# தமிழகத்தில் உள்ள பல்தொழில்நுட்பப் பயிலகங்களுக்கு கல்வி தொடர்பான குறுந்தகடுகள் விநியோகம்

## செய்தி

தமிழகத்தில், தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, தொழில்நுட்பக்கல்வி இயக்ககம், கல்வி தொடர்பான ஒளிநிகழ்ச்சிகள் அடங்கிய குறுந்தகடுகளை கொள்முதல் செய்துள்ளது. இக்குறுந்தகடுகள் சென்னை தரமணியில் உள்ள தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டதாகும். தமிழக பல்தொழில்நுட்பப்பயிலகங்களில் கற்பிக்கப்படும் பாடங்களான ஆங்கிலம், கணிதம், இயற்பியல், மின்னணுவியல் மற்றும் தொடர்பியல், மின்னியல், கட்டிட பொறியியல் போன்ற பாடங்கள் இவற்றில் அடங்கியுள்ளன. இவ்வகையான 230 குறுந்தகடுகள் தமிழகத்தில் உள்ள 100 பல்தொழில்நுட்பப்பயிலகங்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளன.

கல்வி தொடர்பான இக்குறுந்தகடுகள், பல்தொழில்நுட்பப்பயிலகங்களின் நூலகங்ககளில் கற்பிப்பு வளஆதாரங்களாக வைக்கப்பட உள்ளன. இவை, ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்த பெரிதும் உதவும். மேலும், இக்குறுந்தகடுகள் மாணவர்களின் பயன்பாட்டிற்கும் அவர்கள் கற்கும் பாடங்களை நன்கு புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்தப்படும். குறிப்பாக, கிராமப்புற மாணவர்களுக்கு இந்நவீன கல்வி கற்கும்முறை, வகுப்பறையில் பாடங்களை கேட்பதுடன், அவற்றை திரையில் காணவும் வாய்ப்பு ஏற்படுத்துகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

P.R. No.: 1057

1/12/2010

## Distribution of Educational CDs to Polytechnic Colleges in Tamil Nadu

### NEWS ITEM

As an initiative to improve the quality of Polytechnic Education System in Tamil Nadu, the Directorate of Technical Education, Chennai purchased Video Programme CDs developed by National Institute of Technical Teachers' Training and Research, Tharamani, Chennai, related to the basic subjects like English, Mathematics, Physics and Technical Drawing and main subjects like Mechanical Engineering, Computer Engineering, Electronics & Communication Engineering, Electrical Engineering and Civil Engineering, taught in the Polytechnic Colleges, in Tamil Nadu and decided to distribute the copies of CDs to 100 Polytechnic Colleges, in Tamil Nadu.

These Educational CDs issued to Polytechnic Colleges will be kept as one of the Learning Resource Materials in the Library and this will be a major resource for upgrading teaching skills for the Polytechnic College Faculty. Arrangements will also be made to project the CDs to the students in the class rooms, for better understanding of the subjects and creating a new platform for their learning process. To be specific, this modern method of learning will help rural students, through this visual learning medium, in addition to attending class room sessions.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9